விலை சதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, சித்திரை 25வ வெள்ளி (8-5-70) ற. அவ்வல் பிறை 1 — புத்தகம் 24 இதழ் 31



கடமைவீரர் நவத்தின் தேர்தல் கட்டுப்பணத்தை மலையக மக்களின் சார்பில் திரு கிருஷ்ணசாமி, நவத்திடம் அண்மையில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம் இது!

## தமிழ் காங்கிரஸ் தமிழினத்துக்கு காட்டுவது தற்கொலைப்பாதை!



### தமிழ் மக்களுக்கு கதிரவேற்பிள்ளை விளக்கம்

'தமிழ் காங்கிரசுக்கு தமிழ் மக்கள் இடந்தருவது தன்னைத் தானே தற்கொலை செய்வது போன்றதாகும்'

—இவ்வாறு எச்சரிகை விடுத்திருக்கிறார் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை. தினசரியொன்றுக்கு அவர் அளித்திருக்கும் பேட்டியொன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

சமஷ்டி, தீண்டாமை ஒழிப்பு, காங்கிரசை ஏன் பாராளுமன்றத்துக்கு அனுப்பக் கூடாது என்ற மூன்று கேள்விகளுக்கு திரு. கதிரவேலுப்பிள்ளை தகுந்த விளக்கம் அளித்திருக்கிறார்.

தமிழ் காங்கிரசுக்கு தமிழ் மக்கள் இனியும் ஏன் இடம் கொடுக்ககூடாது என்பதற்கு திரு. கதிரவேலுப் பிள்ளை கூறியுள்ள காரணங்கள் வருமாறு:-

1947ல் தமிழ் காங்கிரசை அனுப்பி தமிழினம் பட்ட பெரும் நட்டம் இன்னும் நினைவிருக்கிறது. 10 லட்சம் மலைநாட்டு தமிழ் மக்கள் குடியுரிமையும் வாக்குரிமையும் இழந்தார்கள். 25 தொகுதிகளில் அத் தமிழ் பேசும் மக்கள் செல்வாக்கற்றவர்களானார்கள். எட்டுத் தமிழ்ப் பிரதிநிதிகள் 52ம் ஆண்டுதேர்தலில்பாராளுமன்றத்துக்கு மலைநாட்டிலிருந்து போகமுடியாமல் இருந்தது, இதனால் தமிழ் மக்களுடைய பாராளுமன்றப்பலம் குறைந்தது தனிச் சிங்களச் சட்டம் உருவாகும் சூழ்நிலை உண்டாயிற்று.

கிழக்கு மாகாணம் பல சிங்கள குடியேற்றங்களினால் சிங்களப் பிரதேசம் ஆனது, அங்கிருந்து சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் சூழ்நிலை உருவானது, இப்படி தமிழினத்தின் ஒரு பகுதியை அழிக்கவும் இரு மாகாணங்களில் ஒரு மாகாணத்தை அழிக்கவும் உடந்

(4-ம் பக்கம் பார்க்க)

## நவமும் துரையும் திருமலை செல்வர்

யாழ்ப்பாணம், மே 7

கடமைவீரர் நவரெத்தினமும் மக்கள் தொண்டன் துரைரத்தினமும். இம்மாதம் 10 11 12 திகதிகளில் திருகோணமலை, மூதூர் தொகுதிகளில் பிரச்சார வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

## கனடா தேசத்தறிஞர் தமிழரசைப் புகழ்கிறார்!

பிரிடிஸ் கொலம்பியா யூனிவர்சிடியைச் சேர்ந்த 'கொமன்வெல்த் ஸ்டடிஸ் சென்டரி'லுள்ள கனடா தேசத்து அறிஞரான ரொபட் என்கோணி என்பார் இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பற்றியும், அதன் குறிக்கோள்களைப்பற்றியும், சமஷ்டிக் கொள்கை பற்றியும், தமிழரசுத் தலைவர்களின் தியாகங்கள் பற்றியும் குறிப்பிட்டு ஒரு நூல் வெளியிட்டுள்ளார்.

அந்நூலில் தமிழரசார் பற்றி நடுநிலை நின்று உண்மைக் கருத்துக்களை எழுதியிருக்கும் அவர் அதில் தமிழரசுத் தந்தை செல்வாவை அற்புதமான—தீர்க்கத்தரிசனமுள்ள தலைவர் என்கிறார்.

அந்நூலில் தமிழரசாரின் சத்தியாக்கிரகப் போராட்டம், தபால் நிலையம் நடாத்திய வரலாறு 58ன் இனக்கலவரம், சிங்களம் மட்டும் சட்டம், நீதி மன்ற மொழி, பண்டா — செல்வா ஒப்பந்தம், சிங்கள அரசின் குடியேற்றத் திட்டங்கள் பற்றியெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் புத்தகத்தின் பெயரும் முகவரியும் இதுதான்: Singhalese Nationalism and social conflict in Ceylon— Un versity of British Columbia, Vancouver 8, Canada.

## காரை நகரில் அமிர்தலிங்கத்துக்கு கரைகடந்த உற்சாகவரவேற்பு

### பொய்ப்பிரச்சாரங்கள் பொடிப்பொடியாயின

காரைநகர், மே—5

காரைநகரில் அமிர்தலிங்கம் கூட்டமே வைக்கமுடியாது; அந்த அளவுக்கு காரைநகர் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் புரண்டுவிட்டார்கள்; என்று நாட்டில் பொய்ப்பிரச்சாரம் செய்துவந்த புல்லுருவிகளின் உள்ளங்களில் இடிவிழவும், கன்னித் தமிழ்மீது மாறாத பற்றும் இன உணர்வும்கொண்ட காரைநகர் மக்கள் தமிழரசுக் கட்சி மீதும், திரு. அமிர்தலிங்கத்தின்மீதும் கொண்டுள்ள பாசம் சிறிதளவும் குறையவில்லையென்பதை உறுதிப்படுத்தவும், காரைநகரில் 5.5.70ல் வெற்றிகரமாக நடைபெற்றது தமிழரசுக் கட்சியின் பிரமாண்டமான பிரசாரக்கூட்டம்!



பல்லாயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டத்திற்கு திரண்டு வந்து காரைநகர்

(4-ம் பக்கம் பார்க்க)

## மூதூருக்கு ஆலாலு செல்கிறார்!

யாழ், மே 6

இம்மாதம் 8, 9ந் திகதிகளில் மூதூரில் தமிழரசு வேட்பாளர் திரு. தங்கத்துரையை ஆதரித்து நடைபெறும் தமிழரசுப் பிரச்சாரக் கூட்டங்களில் கிளிநொச்சி தமிழரசு வேட்பாளர் அடலேறு ஆலாலசுந்தரம் உரை நிகழ்த்துகிறார்.

## நாகநாதனுக்கு தங்க 'வீடு' அன்பளிப்பு

நல்லூர், மே 7

நல்லூர் தொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. இ. மு. வி. நாகநாதனுக்கு மேற்படி தொகுதிவாக்காளர் ஒருவர் தங்கத்தினால் செய்யப்பட்ட வீடு ஒன்று அன்பளிக்கவிருக்கிறார், அன்பளிப்பு நல்லூர் தொகுதியில் நடைபெறும், பொதுக்கூட்டத்தில் நடைபெறும் அன்பளிப்புச் செய்யும் வாக்காளர் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை, அன்றியும தனது வாகனத்தையும் தேர்தல் பிரசார வேலைகளுக்குக் கொடுத்துதவ முன் வந்திருக்கிறார்.

## யாழ்ப்பாணத்தில் இராசதுரை சுற்றுப்பயணம்

யாழ்ப்பாணம், மே 6

எழில் தமிழ் ஆளர் இராசதுரை இம்மாதம் 9,10, 11ந் திகதிகளில் யாழ்ப்பாண குடா நாடு முழுவதும் தமிழரசுப் பிரசார வேலைக்காக சுற்றுப்பயணம் மேற்கொள்ளுகிறார். இம் மூன்று தினங்களில் நடைபெறும் சுமார் 15 கூட்டங்களில் அவர் உரை நிகழ்த்துகிறார்.

## மாற்றுக்கட்சி வேட்பாளரின் மானங் கெட்ட சின்னத்தனம்!

மானிப்பாய், மே 6

தமிழரசு வேட்பாளர் ஒருவருடன் பேசப்போய் படுதோல்வி அடைந்த மாற்றுக் கட்சி வேட்பாளர் ஒருவர் அந்த ஆத்திரத்தில் தமிழரசு வேட்பாளரின் கால் செருப்பை கையோடு கொண்டு சென்று விட்டாரா? தமிழரசு வேட்பாளர் அன்று மேடையருகே கழற்றிவைத்த செருப்பை மாற்றுக் கட்சி வேட்பாளர் கொண்டு சென்றிருக்கலாம் என்ற உண்மை அவர் வாயாலேயே இப்பொழுது அம்பலமாகியுள்ளது.

குறித்த வேட்பாளர் குடியிருக்கும் வீதிவழியே தமிழரசு வேட்பாளருக்காக அணமையில் 'கன்வசிங்' செய்து கொண்டு வந்தனர் சில தமிழரசுப் பிரமுகர்கள். இவர்களில்தமிழரசு வேட்பாளரின் சில உறவினகளும் மானிப்பாயைச் சேர்ந்த சில பிரமுகர்களும் இருந்தனர். இதனைத் தனது வீட்டிலிருந்து கவனித்த மாற்றுக் கட்சி வேட்பாளர் தெருவுக்கு ஓடோடி வந்தார்; அக்கூட்டத்திலுள்ள பிரபல தமிழரசுப் பிரமுகரை வலுச் சண்டைக்கு இழுத்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவர் அப்பிரமுகரைப் பார்த்துச்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ்காங்கிரஸ் வா. மு. தலைவர் தமிழரசில் சேர்ந்தார்!

(வல்வெட்டி நிருபர்)

முன்னைநாள் வல்வெட்டி தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளையின் தலைவர் கடந்த 2-5-70 இரவு 9-00 மணிக்கு வல்வெட்டி தமிழரசு வாலிப முன்னணியில் ஒரு அங்கத்தவராக தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

''நான் தமிழரசுக்கட்சிக்குப் புதியவனல்ல' கடந்த பலகாலமாக தமிழரசுக்கட்சியையே ஆதரித்துவந்திருக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னூருக்கு அமிர்தம்பதிகள்

யாழ், மே 7

இம்மாதம் 10ந் திகதி மன்னாரில் திரு. வீ. ஏ. அழகக்கோனை ஆதரித்து நடைபெறும் தமிழரசுப் பிரச்சாரக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமும் பிரதான பேச்சாளர்களாக கலந்து கொள்ளுகிறார்கள்.

## வல்வெட்டி உப-தபால்நிலையம் ஓர் அரசியற் கட்சியின் பிரச்சார மண்டபமா?

(வல்வெட்டி நிருபர்)

வல்வெட்டி உபதபால் நிலையம் ஓர் அரசியற் கட்சியின் தேர்தல் பிரச்சார மண்டபமாக எப்போது மாற்றப்பட்டது? இப்படி ஒரு கேள்வியை எழுப்புகின்றனர் பொதுமக்கள்.

தபாற் கந்தோருக்கு செல்லும்பொதுமக்களை குறிப்பிட்ட ஒரு அரசியற்கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தரும்படி கேட்கின்றாராம். தபால் நிலையத்தின் பொறுப்பானர்.

அரசாங்கத்தின் உதவி சகாயப்பணம் பெறும் ஏழை மக்களிடம் ''நீங்கள் இம்முறை குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்குப் போடாவிட்டால் உங்களின் பிச்சைப்பணம் இல்லாமற் செய்துவிடுவேன்'' என்றும் விரட்டுகின்றாராம் அவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## சிங்கத்தைக் கும்பிட்ட சிறுமைத் தமிழர்கள்!

'தமிழரின் ஒன்றுபட்ட குரலானது ஆரம்பத்தில் காங்கிரஸ் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் சொந்தக்காரணங்களை முன்னிட்டும் மந்திரிப் பதவி கிடைக்காத தனால் ஏற்பட்ட ஏமாற்றம் காரணமாகவும் பிரிந்து சென்றதால் சீர்குலைவுற்றது ஆழ்ந்த பரிதாபத்துக்குரிய விஷயமாகும்.'

—இவ்வாறு, **தமிழ் காங்கிரசிலிருந்து** 1949ம் ஆண்டில் **தமிழரசுத் தந்தை** செல்வநாயகம், அமரர் வன்னிய சிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் தனியே பிரிந்து சென்றதற்கு பொய்யான—விஷமத்தனமான காரணத்தைக் காட்டி முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறது **தமிழ்** காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம்.

தமிழ் காங்கிரசிலிருந்து தந்தை செல்வநாயகம் பிரிந்து சென்றதற்கு காரணம் மந்திரிப்பதவி அவருக்கு வழங்கப் படாமையே என்று நரம்பற்ற நாக்கால் திரு. பொன்னம்பலமும் அவரது சீடர்களும் நாட்டில் கூசாது பொய் பேசி வருகிறார்கள். கொள்கையற்றவர்கள்—நல்ல அரசியல் பண்பு அற்றவர்கள் இதை விட வேறு என்ன செய்ய முடியும்?

ஆனால் 1948ம் ஆண்டு மந்திரிப் பதவிக்காக பெரிய சேனநாயகாவின் காலடியில் ஈனத்தனமாக முழந்தாளில் மண்டியிட்டு முழுத்தமிழினத்தின் மானத்தைக் கப்பலேற்றியது யார் என்பது அழிக்கமுடியாதபடி — வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. அந்தச் சாதனையை நிலைநாட்டியவர் சாட்சாத் திரு. பொன்னம்பலம்தான்.

இந்த உண்மையை பட்டவர்த்தனமாக — எடுத்துக் கூறியிருப்பவர் விஷயம் தெரியாத சாதாரண ஏனோதானோ பேர்வழியல்ல. ஏரிக்கரை நிறுவன ஏடுகளில் கடமையாற்றிய பிரபல பத்திரிகையாளரும் பொறுப்பு வாய்ந்தவருமான ஜே. எல். பெர்னாண்டோ அவர்களே ஜீ. ஜீ. யின் மண்டியிட்ட கதையை வரலாறு ஆக்கியவர். திரு. பெர்னாண்டோ காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயகாவுடன் நெருங்கிப் பழகியவர்.

ஏரிக்கரை நிறுவனம், யூ. என். பிக்கும் அதன் வடபகுதிக் கிளையான தமிழ் காங்கிரசுக்கும் எப்பொழுதுமே ஊதுகுழலாக விளங்கிவரும் ஒரு நிறுவனமாகும். எனவே அந்த நிறுவனத்தில் கடமைபுரிந்த பத்திரிகையாளர் ஒருவர் திரு. பொன்னம்பலத்தைப்பற்றி இல்லாததை—நடவாததை ஒருபோதும் எழுதியிருக்க முடியாது.

திரு. ஜே. எல். பெர்னாண்டோ தமது (Three Prime Ministers of Ceylon) 'இலங்கையின் மூன்று பிரதமர்கள்' என்ற புத்தகத்தில் என்ன கூறுகிறார்?

It was a historic reply that we heard. "Sir, The Tamil worshipped the Sinhaya'. He described how Ponnambalam on seeing Senanayake coming out to the verandah and bent down low and made obeisance in oriental fashion, to the Prime Minister."

"நாங்கள் கேட்ட பதில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. 'ஐயா தமிழன் சிங்கத்தைக் கும்பிட்டான்'. என்று (கரோலின்) கூறினான். விருந்தைக்கு வந்த சேனநாயக்காவைக் கண்டதும் எப்படி நன்றாகக் கீழே குனிந்து கீழைத் தேய முறையில் முதலமைச்சருக்கு பொன்னம்பலம் கும்பிடு போட்டார் என்ற விபரத்தை அவன் விளங்கப்படுத்தினான்''.

திரு. பொன்னம்பலம் தான் இந் நாட்டுத் தமிழினத்தின் தலைவனாக அன்று இருந்ததையும் மறந்து—தமிழ் பேசும் மக்களின் சுயமரியாதையை—கௌரவத்தை நிர்மூலமாக்கி, கேவலம் ஒரேயொரு மந்திரிப் பதவிக்காக டி. எஸ். சேனநாயகா காலில் மண்டியிட்டு யாசித்த வரலாற்றை இப்படி பச்சையாக எழுதியிருக்கிறார் திரு. பெர்னாண்டோ.

இப்படி தமிழினத்தின் தன்மானத்துக்கு அழியாத—நிரந்தர வடுவை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் திரு. பொன்னம்பலம்!

சிங்கத்தின் காலில் மண்டியிட்டான் தமிழன் என்று சாதாரண ஒரு சிங்கள வேலைக்காரனே கிண்டல் செய்யுமளவுக்கு பதவியாசை காரணமாக நடந்துகொண்டவர் திரு. பொன்னம்பலம்.

திரு. பெர்னாண்டோ தமது நூலில் எழுதியிருப்பது பொய்யாக இருந்தால்—திரு. பொன்னம்பலம் அந் நூலைத் தடைசெய்யும்படி கோரி இதுவரை சட்ட நடவடிக்கை எடுத்திருக்கலாம்—ஆனால் அப்படி எதுவும் அவர் செய்யாததிலிருந்தே திரு. பெர்னாண்டோ கூறியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மையென்பது துலாம்பரமாகிறதல்லவா?

இப்படி கொஞ்சம்கூட மானரோசமின்றி—ஒரு மந்திரிப் பதவிக்காக தமிழினத்தின் மானத்தை விலை கூறிவிற்றவர்கள்தான் இன்று தியாகத்திருவுருவான தமிழரசுத் தந்தை மீது களங்கம் கற்பிக்க முயற்சிக்கிறார்கள்.

சிங்கத்தின் காலில் மண்டியிட்ட சிறுமைத் தமிழர்களே! உங்களை ஈழத் தமிழக அரசியலில் விட்டுவைப்பது இனியும் ஆகாது என்று முடிவு செய்துவிட்டார்கள் தமிழ் பேசும் மக்கள்.

நீங்கள் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைகளை—நில உரிமைகளை சிங்களவனுக்கு தாரைவார்த்துக்கொடுத்ததுமன்றி தமிழினத்தின் மானத்தையே சிங்களவன் காலில் அர்ப்பணித்தவர்கள்—உங்களை அரசியலிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் மறு வேலையென்று புறப்பட்டுவிட்டனர் புலிநிகர் தமிழர்கள்!

நந்தமிழின் காவலன் செல்வா மீது நச்சுச் சொல் வீசும் உங்கள் நாக்கு அழுகிப்போகாதா என்று பிடி சாபம் போடுகிறார்கள் தன்மானத் தமிழ்ப் பெண்கள்!

இவர்களின் சாபம் மே 27ல் பலிக்கத்தான் போகிறது! துரோகிகளே தொலையப்போகிறீர்கள்—இது நிச்சயம்!

# சுந்தரலிங்கத்தாரே! இதோ

## நீங்கள் தமிழினத்துக்கு இழைத்த

## அட்டமா துரோகங்களின் பட்டியல்!

## வாக்குக் கேட்கப் போகும்போது இப்பட்டியலையும் கொண்டு செல்லுங்கள்!

திரு. சுந்தரலிங்கம்,
கீரிமலை.

அன்புள்ள ஐயா,

**1947ம்** ஆண்டுத் தேர்தலில் ஜெயக்கொடி நாட்டி டி. எஸ். மந்திரி சபையில் மந்திரியாகிய தாங்கள் தமிழினத்தின் இன்றைய இக்கட்டான நிலைக்குக் காரண கர்த்தாவாக இருந்ததை தமிழினம் பச்சையாக ஞாபகத்தில் வைத்திருக்கின்றது.

நாவலர் பெருமானுக்குப் பின் சைவ சமயத்தைக் காப்பதற்குப் புறப்பட்டிருக்கும் ஆறும் சமய குரவராகத் தங்களைச் சிலர் கருதி அப்பாவி மக்களை ஏமாற்றி வாக்கு வேட்டைக்குச் செல்வதையும் தாங்கள் அறியாததொன்றல்ல. வேலா? சிலுவையா? வேண்டும் என்று சைவ மக்களைச் சிறப்பாகத் தாங்களைப் போல் வயது வந்தவர்களையும், பெண்களையும் கேட்டும் வருகின்றீர்கள். சிலர் தங்களிடம் வேலும் வேண்டாம்; சிலுவையும் வேண்டாம்; லிங்கமும் வேண்டாம்: எமக்கு வேண்டுவதெல்லாம் நாயகமே யன்றி வேறொன்றில்லைப் பராபரமே என்று சொல்லி வருவதைக் கேட்ட பின்னரும் இன்னும் தங்கள் சனிதவிற்பன்ன மூளைக்கு மக்கள் ஆதரவு யார் பக்கம் என்பது தெரியாமல், புரியாமல் இருப்பது விந்தையிலும் விந்தையே!

''பேச் செல்லாம்
தமிழ்மொழியின் பெருமைபேசி
பெற்றதெல்லாம்
தமிழ்த்தாயின் பெற்றி என்றும்
மூச்செல்லாம்
தமிழரசு காணும் மூச்சே வாங்கி
முற்றுமவள் திருப்பணிக்கே
மூச்சுவிடும்''

தமிழரசுத் தந்தையாம் உதய சூரியன் முன் வெறும் மின்மினியாக விளங்கிப் பூச்சாண்டி காட்டுகின்றீர்கள். சைவத்தை என்றும் எவராலும் அழித்துவிட முடியாது. உண்மையான சைவ பக்தனுக்குச் சாதி மத பேதம் குறுக்கே நிற்கமாட்டாது.

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நிமலன் சந்தியில் சாதி என்ற போலி வேலியிட்டு எத்தனை நாட்களுக்கு உங்கள் காரியத்தைச் சாதிகக்கப் போகின்றீர்கள்? சைவம் என்றும் வேல் என்றும் கூறி அன்று தமிழ் இனத்திற்கு நீங்கள் இழைத்த துரோகச் செயலை மறைக்கவா இந்த வேஷம் போட்டிருக்கிறீர்கள்.

வெறும் பேச்சுடன் நில்லாது செயலிலும் இறங்கினால் என்ன? காவியும் கமண்டலமும் ஒத்திக்கொண்டு, நெற்றிக்குப் பட்டையும், கழுத்துக்குக் கொட்டையும் ஒற்று வாக்குப் பிச்சை கேட்கச் சென்றால் மிக நேர்த்தியாக இருக்குமல்லவா?

### துரோகப் பட்டியல் இதோ

வாக்கு வேட்டைக்கு வீடு வீடாக அலையும் போது நீங்கள் தமிழினத்திற்குச் செய்த துரோகப் பட்டியல் ஒன்றும கொண்டு சென்றால் மக்கள் உங்களை நன்கு அறிந்து, பின் வாக்களிப் பார்கள். அப்படியான பட்டியலை நீங்கள் தயாரிக்க அவகாசம் இல்லாமல் போனாலும் நான் அத்தகைய பட்டியல் ஒன்றை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இதனை எடுத்துச் செல்லுங்கள்:

(1) 1947ல் ஐ. தே. கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காத போது நான் டி. எஸ். மந்திரிசபையில் சேர்ந்து தமிழன் பதவி ஆசை பிடித்தவன் என்பதை மெய்ப்பித்தேன். இதனால் தமிழினத்திற்கு எதுவும் செய்யாது பதவியைப் பெற்றுச் சோல்பரி அரசியற் திட்டத்தைத் தமிழ் மக்கள் சார்பில் ஏற்றுக் கொண்டேன். அதனால் தான் இன்று தமிழினம் இந்நிலைக்கு வந்திருக்கின்றது.

(2) 1928ல் ஐ. தே. க. பலம் குன்றி இருந்த போது நான் எதுவித நிபந்தனையுமின்றி ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து மலைநாட்டுத் தமிழ் மக்கள் வாக்குரிமைக்கு மண்ணை அள்ளிப் போட்டேன்.

(3) திரு. டி. எஸ். பதவி காட்டி தமிழன் மூலபலத்தைப் படிப்படியாகக் குறைத்த போதும் நான் பதவிப் போதையில் என்னை மறந்திருந்தேன்.

(4) இதனால், சோல்பரி அரசியற் திட்டத்தை ஏற்றுக்கொண்டதால் தமிழினம் பலிகடாவாக்கப்பட்டது. தமிழினத்தின் கொடி அந்தஸ்துப் பறிக்கப்பட்டது. சிங்கக்கொடியை ஏற்றதன் மூலம் தமிழினம் இழிச்சவாயர் இனம் என்பதை உலகறியச் செய்தேன்.

(5) பத்துலட்சம் தமிழர்கள் குடியுரிமை, வாக்குரிமை இழக்கக் காரணமாக இருந்தேன், இதன் பயனை எட்டுத் தமிழ் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்தில் இழக்கக் காரணமாய் இருந்தேன். ஐ. தே. கட்சி முதலாவது பாராளுமன்றத்தில் என் ஆதரவுடன் எடுத்த நடவடிக்கையின் பயனை 1952ல் அது அறுவடை செய்தது. இந்திய வம்சாவழியினர் அனைவரும் தம் வாக்குரிமையை இத்தேர்தலில் இழந்தனர். மலையகத்தில் வாக்காளர் தொகை குறைந்ததால் ஐ. தே. கட்சி நன்மை பெற்றது. 95 அங்கத்துவ பாராளுமன்றத்தில் 54 உறுப்பினர்களை ஐ. தே. கட்சி பெற்றுக்கொண்டது. தலவாக்கொல்லை போன்ற தொகுதியில் 1,198 வாக்குகளை மாத்திரம் பெற்ற திரு. எச். ஈ. பீ. த. மெல் 846 வாக்குகளைப் பெற்ற திரு. வணிகசேகராவைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். இத்தொகுதியில் முதற் பாராளுமன்றத்துக்கு போட்டியிட்ட திரு. சி. வி. வேலுப்பிள்ளை (1970 தேர்தலில் நுவரெலியாவில் சுயேச்சையாளராகப் போட்டியிடுபவர்) 10,645 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார் என்பதையும் நான் தமிழ் மக்கள் முன் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்,

(6) தமிழ் மக்கள் பாரம்பரிய பிரதேசங்கள் கிழக்கு மாகாணம், வவுனியா போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றம் பெருமளவில் பெருகியதற்கும் நானே காரணம். பட்டிப்பளை என்ற தமிழ் பிரதேசம் கல்லோயாவாக மாறவும், தமிழ்பிரதேசத்தில் சிங்களத் தொகுதியாம் அம்பாறை தோன்றவும் காரணமாக இருந்தவனும் அடியேன் தான். இதன் காரணமாகவே இன்று திருகோணமலை மூதூரிலும், வவுனியாவிலும் சிங்களவர் போட்டியிட முடிந்தது.

(7) நான் டி. எஸ். மந்திரி சபையில் சேர்ந்திருக்காவிட்டால் 1947ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திரச் சட்டம் (Ceylon Independence Act) இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேறியிருக்க மாட்டாதென்பதை நான் 1959 மே மாதம் 11ந்திகதி திருவாளர்கள் செல்வநாயகம், பொன்னம்பலம், மாக்கான் மாக்கார் ஆகியோருக்கு எழுதிய அறிக்கைமூலம் ஒப்புக்கொண்டேன்; இதோ அந்த அறிக்கை.

''சிறுபான்மைச் சமூகங்களை மொழி அடிப்படையில் புறக்கணிக்க மாட்டார்கள் என ஊகித்து நான் திரு. டி. எஸ், மீதும், சிங்கள மக்கள் மீதும் கொண்ட நம்பிக்கையின்பேரில் நடந்திராவிட்டால் 1947ம் ஆண்டின் இலங்கை சுதந்திர சட்டம் நிறைவேறியிருக்காது என்பதையும், தமிழ்பேசும் மக்களும் இந்த மோசமான அவல நிலைக்கு ஆளாகியிருக்க மாட்டார்கள் என்பதையும் பணிவுடன் கூறிக் கொள்ளுகிறேன். சேனநாயக்கா மந்திரிசபையில் நான் கொடுத்த ஒப்புதலின் காரணமாக அவர்களை இந்நிலைக்கு ஆளாக்கியமைக்கு நானே பொறுப்பாளியாகவிருந்தேன் என்பதையிட்டு மிகவும் வருந்துகிறேன்...... எனது நடத்தையும், 1947ம் ஆண்டில், உலகம், உலகியல்பற்றிய எனது (தவறான) கணிப்பும் தமிழ்பேசும் மக்களை இன்றைய பரிதாபகரமான பாழ்நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றன என்பதை உணரும் போது எனக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது!''

(8) திரு. செல்வநாயகத்தின் தலைமையையும் தமிழர் உறுதிப்பாட்டையும், கண்டு வெதும்பிக் காலஞ்சென்ற டி. எஸ், சேனநாயக்காவை உச்சி குளிரவைப்பதற்காக நான் சொன்ன வாசகத்தையும் இங்கு குறிப்பிடாவிட்டால் எனக்கு நித்திரை வரமாட்டாது. **Lean and hungry looking man** என அவரை வர்ணித்தேன்.

நீங்கள் தமிழினத்தை எட்டுக்கு வைத்த எட்டுத் துரோகப் பட்டியலும் இப்போதைக்குப் போதும்.

அரசியல் அரங்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட நீங்கள்—வவுனியாவில் வால் ஒட்ட நறுக்கப்பட்டு, மூதூர் சென்று கட்டுக்காசுக்கும் கதியற்று மூக்கறுபட்டு வந்திருந்தீர்கள்.

இன்றோ நாயகத்துடன் சூரன்போர் நடாத்துவதாகச் சொல்லுகின்றீர்கள். தங்கள் போர் அவரும்வைக்கோல் போர் என்பதை மே 27 இரவு தெரிந்துகொள்

(4-ம் பக்கம் பார்க்க)

# மாதோட்ட நன்னகரம்

## பண்டைப் பெருமையை விரைவில் அடையும்!

## எனது சேவைகளிற் சில இதோ! பணியைத் தொடர ஆதரவு நல்குவீர்!

### அழகக்கோனின் உருக்கமான வேண்டுகோள்!

மன்னார், மே 7

''சென்ற பொதுத் தேர்தலில் முந்திய முறைகளைப் போல் பெருந்தொகையான வாக்குகளால் என்னைத் தெரிவுசெய்து அனுப்பினீர்கள். அதற்கு என் மனங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். அத்தேர்தலில் எத்தனையோ தீயசக்திகள் எனக்கெதிராகப் போராடின. சாதிமத பேதங்களைக் கிளப்பினர். முக்கியமாக என் மதிப்பிற்குரிய இஸ்லாமிய அன்பர்கள் மத்தியில் பிளவை உண்டாக்கித் தம் சுலநலத்தை ஈடேற்ற முயன்றனர். ஆனால் இறைவன் அருளாலும் நன்றி மறவாப் பண்பைக் கொண்ட மன்னார் மக்களின் அபிமானத்தாலும் சுயநலமிகளின் சூட்சிகளை முறியடித்து வெற்றிவாகை சூடப்பட்டேன். கடந்த ஐந்து வருடங்களிலும் பாராளுமன்றத்தில் உங்கள் பிரதிநிதியாக இருந்து யான் செய்த சேவைகளைச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.''

இவ்வாறு திரு. வீ. அழகக்கோன மன்னார் தொகுதி மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் கூறியுள்ளார். அவர் மேலும் அதில் கூறியிருப்பதாவது:—

களனியெல்லாம் செந்நெல்லும், கடலெல்லாம் மீனினமும் நிறைந்தது நம் மன்னார்ப் பிரிவு. இவ்விரு தொழில்களும் நம்மக்களின் இருவிழிகள் என்பதை நான் நன்கு உணர்வேன். இவற்றின் வளர்ச்சிக்காக நான் கடந்த காலங்களில் எடுத்த முயற்சிகள் நற்பயனைத் தந்துள்ளன.

#### விவசாயம்

மன்னார்ப் பிரிவின் விவசாயத்திற்கு உயிர்நாடியாக இருப்பது கட்டுக்கரைக் குளமாகும். இக்குளம் அருவியாற்றில் ஓடிவரும் தண்ணீரைக் கொள்வதற்குத் தகுதியற்றதாய் இருந்தமையால் ஏராளமான நீர், கடலுட் பாய்ச்சப்பட்டது. எனதபார முயற்சியால் 12 இலட்சம் ரூபா செலவில் செப்பனிடப்பட்டு இன்று உயர்ந்த அணைக் கட்டுகளுடன் போதிய தண்ணீரைக் கொள்ளக் கூடியதாகக் காட்சியளிக்கின்றது. இதன்பயனாக எம்முறையும் இல்லாதவகையில் சிறுபோகம் மூன்றுக்கு ஒன்று என்ற முறையில் வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் மாதோட்டம் தன் பண்டைய புகழைப் பெற்று இலங்கையின் நெற்களஞ்சியமாகத் திகழும் என்பதில் நான் பெருமை அடைகிறேன்.

முசலிப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் அகத்திமுறிப்பு வாய்க்கால் நன்நிலையில் இல்லாததால் வருடா வருடம் அப்பகுதி மக்களது வேளாண்மை பழுதடைந்து பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்தது. இந்நிலையை நீக்கக் கனம் மந்திரி அவர்களைப் பன்முறை பேட்டிகண்டு 16 மைல் நீளமான இந்த வாய்க்காலைச் செப்பனிட்டுத் தரும்படி வேண்டியதன் பேரில் இந்த நிதி வருடத்தில் அவ்வேலைக்கு 50,000 ரூபா ஒதுக்கி இருப்பதுடன் மீதிப் பணத்தையும் தருவதாக வாக்களித்துள்ளார்கள்.

முள்ளிக்குளம் மறிச்சுக்கட்டியை அடுத்த கிராம மக்களுக்குச் செய்யப்பட்ட ''மோதாரகமம்'' ஆற்றுத் திட்டவேலை முடிந்தும் வயல்களுக்கு நீர் விநியோகம் செய்யும் வாய்க்கால்கள் வெட்டும் வேலை தடைபெற்றிருந்தது. நான் இடைவிடாது செய்த முயற்சியால் வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளதை நீவிர் அறிவீர்கள்.

கடந்த சூறுவளியின் போது கடல் நீர் வயல்களுட் பரவியதால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு உப்புவெள்ளப் பணம் பெருந்தொகையாகப் பெற்று கொடுத்தேன்.



இன்னும் கொடுபடவிருக்கிறது. விவசாயிகள் பெற்ற விவசாயக் கடனைக் கட்ட முடியாதவிடத்து அவர்களது கூப்பன்கள் பறிமுதல் ஆக்கப்பட்டமையும் புதிய கடன் உதவி மறுக்கப்பட்டமையும் நீவிர் அறிந்ததே. எனது முயற்சியினால் முக்கியமாக முசலிப்பகுதி மக்களின் கூப்பன்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டு கடன் கட்டும் கால எல்லையையும் நீடித்துப் புதிய கடனும் பெற வசதி செய்து கொடுத்தேன்.

#### மீன்பிடி

மன்னார்ப் பகுதி மீனவர்கட்கு ஒரு பெருமதிப்பாக இலங்கையில் முதன் முதல் மீன்களை தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலையை என் பெரு முயற்சியால் பேசாலையில் நிறுவச் செய்தேன். இதன்பயனாக மன்னார்ப் பிரிவில் வேலையற்றிருந்த வாலிபர்களும் பெண்களும் வேலை வாய்ப்புப் பெற்று வேதனம் பெறுவதைக் காணப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வருடத்தில் இருந்து இலங்கையின் முக்கிய பட்டினங்களில் தகரத்தில் அடைக்கப்பட்ட மன்னார் மீன் விலைப்பட்டு வருவதைக் காணப் பெருமைப்படுகிறேன். அத்துடன் தகரத்தில் அடைக்கத் தகுந்த மீனினங்களை வளர்ப்பதற்கு மன்னார் முகத்துவாரத்திலும், மன்னாரிலும் இரு மீன் வளர்ப்புப் பண்ணைகளை உருவாக்குவதற்கு வழி செய்துள்ளேன். மன்னார்ப் பகுதி மீனவர்கட்கு மீன் பிடிக்க உதவும் இயந்திரப் படகுகள் கூடுதலாக வழங்கப்படப் பெரு முயற்சி செய்துள்ளேன். எம்பகுதி மீனவர்களும் மீன் பிடிப்பதில் பழைய முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகட்கு ஆதரவு கொடுத்து அதில் ஊக்கமுடன் உழைக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

#### போக்கு வரத்து

மன்னார் பகுதியில் மக்கள் பிரயாணம் செய்வதற்குப் போதிய பஸ்வண்டிகள் இல்லாது படும் கஷ்டத்தை நான் நன்கு உணர்வேன். இக்கஷ்டம் பொதுவாக இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளதுதான். என்றாலும் என் விடாமுயற்சியால் 9 பஸ் வண்டிகளைப் பெற்றுக் கொடுத்ததுடன் மேலும் பல பஸ் வண்டிகள் பெற முயற்சி செய்து வருகிறேன். இ. போ. ச.வில் எம்பிரிவு வாலிபர் அநேகர்களுக்கு சாரதிகளாகவும், கொண்டக்டர்களாகவும் பதவிகள் பெற்றுக்கொடுத்துள்ளேன். தாழ்வுபாடு, பாலம்பிட்டி, கொக்குப்படையான போன்ற இடங்களுக்குப் புதிய பஸ் சேவைகளை ஆரம்பித்து வைத்தேன். பரப்புக் கடந்தானுக்கு புதிய பஸ் சேவையை ஆரம்பிக்க முயற்சி செய்துவருகிறேன்.

அகில இலங்கையிலும் வாழும் என் அன்புக்குரிய இந்துசமய மக்களது வசதிக்காக திருக்கேதீஸ்வரம் புகையிர நிலையத்தை நிறுவிக் கொடுத்தேன். இதேபோல் மாதோட்டப் புகையிரத நிலையத்தையும்கட்டுவதற்கு முயற்சி செய்து வருகிறேன்.

போயா நாட்களில் கொழும்பிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் செல்லும் பிரயாணிகள் இங்கிருந்து இரவு 8 மணிக்குப் புறப்பட்டு அனுராதபுரியிலும் மதவாச்சியிலும் இறங்கி வேறு புகையிரத வண்டிகளுக்குக் காத்திருக்க வேண்டிய கஷ்டத்தை நீக்கி போயா நாட்களிலும் வழமையான நாட்களைப்போல மக்கள் பிரயாணம் செய்ய வசதி செய்து கொடுத்துள்ளேன். முசலிப்பகுதி மக்கள் அருவியாற்றைக் கடந்து பிரயாணம் செய்வதற்குப் பட்ட கஷ்டங்களை யான் கூற வேண்டியதில்லை. கடந்த 15 வருடங்களாக யான் ஓயாது போராடியதன் பயனாக அருவியாற்றுப் பாலம் என்ற கனவு நனவாகி ஒன்றரைக் கோடி ரூபாத்திட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவதைப் பெருமையுடன் கூறுகிறேன். குஞ்சுக்குளம் மக்களின் பிரயாண வசதிக்காக ஒரு சங்கிலிப்பாலம் அமைக்க $2\frac{1}{2}$ இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதை யாபேரும் அறிவீர்கள்.

#### சுகாதார சேவை

சீர்கேடான நிலையில் நோயாளிகள் தங்குவதற்குப் போதிய கட்டிடங்கள் இன்றி இருந்த மன்னார் வைத்திய சாலையை எனது இடையறா முயற்சியால் மன்னார்ப் பிரிவின் பிரதம வைத்திய சாலையாக்கி 4 இலட்ச ரூபா செலவில் நோயாளிகள் தங்கும் புதிய கட்டிடமும் கட்டச் செய்துள்ளேன். அத்துடன் ஓர் சத்திர சிகிச்சை நிலையமும் ஏற்படுத்தி ஓர் சிறந்த சத்திர சிகிச்சை நிபுணரையும் வரவழைத்ததால் மன்னார்ப் பிரிவு மக்கள் அடைந்துள்ள வசதிகளையும் நன்மையையும் கூறவேண்டியதில்லை. மன்னார் வைத்திய சாலையில் தண்ணீர் விநியோகத்திற்கு 69,000 ரூபா ஒதுக்கப்பட்டு வேலை நடைபெற்றுவருவதையும், முருங்கன் வைத்திய சாலையில் 40,000 ரூபா செலவில் பிரசவ விடுதி ஒன்று வேலை முடிந்துள்ளதையும். அடம்பன் வைத்தியசாலை தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க மின்சக்தியால் இயங்கும் தண்ணீர்த்தாங்கி அமைத்துக் கொடுத்ததையும், மன்னார் வைத்தியசாலையில் நிர்வாக அலுவலகத்திற்கு 4 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டு விரைவில் வேலைகள் ஆரம்பிக்க இருப்பதையும் உங்கட்கு உவகையுடன் கூற விரும்புகிறேன்.

#### தண்ணீர் விநியோகம்

விடத்தல் தீவு மக்கள் சூறுவளியின் பின் தண்ணீருக்குப் பட்ட கஷ்டத்தை அறிந்து 25 ஆயிரம் ரூபா செலவில் ஓர் தண்ணீர்த் தாங்கியும் 20,000 ரூபா செலவில் இன்னுமோர் தண்ணீர்த் தாங்கியையும் கட்டிக் கொடுத்து தண்ணீர்க் குழாய்கள் பதிக்கும்வேலை நடைபெற்று வருவதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். விடத்தல்தீவைச் சேர்ந்த சன்னார் என்று அழைக்கப்படும் வெளிமதுரங்குளத்தைத் திருத்துவதற்கு 7 வருடங்களாக முயற்சி செய்து இந்த நிதி வருட வேலைத் திட்டத்தில் முதல் வேலையாகச் செய்யப்படுமெனக் கனம் மந்திரி அவர்களிடம் வாக்குறுதி பெற்றுள்ளேன். வங்காலைத் தண்ணீர்த் திட்டத்தை விஸ்தரிக்க அம்மக்களின் குடி தண்ணீர்க் குறை நீக்க 30,000 ரூபா பெற்றுக் கொடுத்தேன்.

#### கல்வி

மன்னார்ப் பகுதியில் இருந்த ஓலைப் பள்ளிக்கூடங்கள் யாவையும் ஓட்டுப் பள்ளிக் கூடங்களாகப் பெரு முயற்சி செய்து வெற்றி பெற்றேன் பேசாலை, வங்காலை நானாட்டான், முருங்கன், முசலி, அடம்பன், விடத்தல்தீவு, பெரியமடுப் பாடசாலைகளை மகாவித்தியாலய தரத்திற்கு உயர்த்தியதுடன் அப்பாடசாலைகளுக்கு விசேட தராதரம் பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவும் பெருமுயற்சி செய்து வருகிறேன். அடுத்த வருடத்தில் இருந்து உயர்தர விஞ்ஞானக் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் பிற இடங்களுக்குச் சென்று கஷ்டப்படாது, மன்னாரிலேயே கல்வி கற்க யான் செய்யும் முயற்சி வெற்றியடையுமென நிச்சயமாகக் கூற விரும்புகிறேன்.

ஆரம்பப் பாடசாலைத் தரத்திற்குக் குறைக்கப்பட்ட விடத்தல்தீவு, பறப்பாங்கண்டல் பாடசாலைகளில் மீண்டும் 8-ம், 9-ம், 10-ம் வகுப்புகள் வைக்க வசதி செய்து கொடுத்தேன். மூடப்பட்டிருந்த மருதமடுப் பள்ளிக் கூடத்தைத் திறப்பித்து அப்பகுதி மாணவர்கள் கல்வி கற்க வசதி செய்தேன். முசலி தெற்குப் பாலைக்குழி, கட்டாடிவயல், பரப்புக்கடந்தான், சின்ன வலயன்கட்டு, பனங்காமம் பூவரசங்குளம், பனங்காமம் மூன்று முறிப்பு, கள்ளியடி முதலிய இடங்களில் புதிய பாடசாலைகளைக் கட்டிக் கொடுத்துக் கல்வி வளர உதவி புரிந்துள்ளேன். அளவக்கையிலும் புதிய பாடசாலைகள் திறக்க முயற்சி செய்து வருகிறேன். நகூல் புதுவெளியில் மன்னார்ப் பகுதி முஸ்லீம் மக்களின் முதல் அரபிக் கலாசாலை அமைப்பதற்கு நிதி உதவி சேர்க்க என்னாலியன்ற உதவி செய்தேன்.

எருக்கலம்பிட்டியில் மின்சார விநியோகம், முருங்கன் தபாற் கந்தோர் அமைக்க ரூபா 2 இலட்சம், பேசாலைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## பொன்னம்பலம் ஐயாவிடம் திருவாளர் பொதுஜனம் கேட்கும் கேள்வி

''தமிழ்மொழிச் சட்ட விதிகளால் எந்தப் பிரயோசனமும் இல்லை. இப்பொழுது வடக்கிலும் கிழக்கிலும் உத்தியோகபூர்வமான தஸ்தாவேஜுகள் சிங்களத்தில் தான் இருக்கின்றன...''

10 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவழியினருக்கும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழுகின்ற இலட்சக்கணக்கான தமிழர்களுக்கும் தனிச்சிங்கள மொழியில் காகித உறைகளிலிருந்து கடிதம்வரை வந்துகொண்டிருக்கின்றன...''

(தேசிய அரசாங்கம் 1967ல் கொண்டு வந்த) ''இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டம் 1948ம் ஆண்டுச் சட்டத்தைவிட 1000 மடங்கு மோசமானது...''

—(2-5-70 ஈழநாட்டுக்கு அளித்த பேட்டியில் திரு. ஜீ. ஜீ,)

''...சிங்களவர்களுடன் ஒத்துழைத்துத்தான் (தமிழ் மக்களின்) பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும்.

—அதே பேட்டியில் ஜீ. ஜீ.

### திருவாளர் பொதுஜனம் கேள்வி

ஐயா, பொன்னம்பலமே! 1965லிருந்து 1969 ஏப்ரல்வரை தமிழரசுக்கட்சியும் 1965 லிருந்து 1970 மார்ச் வரை தங்கள் தமிழ்காங்கிரசும் யூ. என், பி. க்கு பூரண ஒத்துழைப்புக் கொடுத்தீர்கள் என்பது நாடறிந்த உண்மை. மேலே நீங்கள் சுட்டிக்காட்டியவை உண்மையாக இருந்தால்—தேசிய அரசாங்கம் இவ்வளவு படுபாதகங்களையும் செய்ய ஏன் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்? ஏன் அரசாங்கத்தை விட்டு வெளியேறாமல் அட்டைபோல ஒட்டியிருந்தீர்கள்?

1948ம் ஆண்டுச் சட்டத்தைவிட 1000 மடங்கு பாதகமான இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை உங்கள் நண்பரான டட்லி சேனநாயகா கொண்டு வந்தபோது நீங்களும், உங்கள் இரு சீடர்களான சிவாக்களும் எதற்காக அதை ஆதரித்து வாக்களித்தீர்கள்? ஆதரித்துப்பேசினீர்கள்? உபசபாநாயகர் பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்திலா!

தமிழ்மொழிச் சட்ட விதிகள் தீமையானவையென்றால் ஏன் அதைத் துணிச்சலுடன் எதிர்க்க திராணியற்று இருந்தீர்கள்? ஏன் ஆதரித்தீர்கள்?

இரு தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைத்தபோதே (உங்கள் கூற்றுப்படி) இவ்வளவு பாதகமான சட்டங்களை கொண்டுவந்த சிங்கள அரசாங்கத்துடன் மேலும் எவ்விதத்தில் ஒத்துழைத்து உரிமையை நிலைநாட்டப் போகிறீர்கள்? பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்போகிறீர்கள்? 1948ம் ஆண்டு டி. எஸ். காலில் மண்டியிட்டதுபோல்—டட்லி காலில் மண்டியிடப்போகிறீர்களா? மந்திரிப் பதவிக்காக?

சுதந்திரன்
SUTANTIRAN

தமிழ் காங்கிரஸ் தமிழி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தையாயிருந்த தமிழ்க் காங்கிரசை அனுப்பினுல் எஞ்சியிருப்பதும் பறிபோய்விடும்.

இன்றும் சிங்கள பௌத்த பாடசாலைகளை உருவாக்கி தமிழ் சைவ மக்களை சிங்கள பௌத்தராக்கும் திட்டத்தை உருவாக்கிய அரசாங்கத்திற்கு மீளா அடிமையாகி தமிழ் காங்கிரஸ் ஒத்துழைக்கிறது. அவர்களை அனுப்பினுல் யாழ்ப்பாணத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் சிங்கள பௌத்தர்களாக மாற்றப்படுவார்கள். ஆகவே தமிழ்க் காங்கிரஸ் கட்சியினருக்கு தமிழினம் இடம் கொடுப்பது தன்னைத் தானே தற்கொலை செய்வதாகும்.

சமஷ்டி ஆட்சி

1956-ம் ஆண்டிற்குப் பின்பு தான் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளைத் தமிழ் மக்கள் பெரும் பாலாகத் தெரிந்தார்கள. அதற்கு முன் தமிழரசுக் கட்சியின் பிரசார காலமென்று சொல்லலாம், நாம்செய்த பல போராட்டங்கள், ஸ்ரீ எதிர்ப்பு, சிங்கள திணிபபு எதிர்ப்பு, சத்தியாக்கிரகம் முதலிய பல இயக்கங்களாக இருந்தன. நாட்டிலே சமஷ்டி அரசியல் அமைப்பு அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு போராட்டமும் இன்னும் நடாத்தவில்லை.

தமிழ் பேசும் மக்களை முதலில் சமஷ்டி அரசியல் அமைப்பை ஏற்கச் செய்ய வேண்டும். அதைச் செய்துள்ளோம் இன்னும் சில தமிழ் பேசும் மக்கள் இதில் நம்பிக்கையில்லாமலிருக்கிறுர்கள். அவர்களையும் திருத்தவேண்டும். சிங்கள மக்கள் இறுதியில் சமஷ்டி அரசியலமைப்பை ஏற்பார்களென்பதில் ஐயமில்லை.

இலங்கையில் முதல் முதல் 1924ல் சமஷ்டி அமைப்பு நல்லதென்று சொன்னவர் காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள். டொனமூர்க்கொமிஷனர் முன்னும், சோல்பரி கொமிஷனர் முன்னும், கண்டி நாட்டு சிங்களவர்களுடைய கண்டிய தேசிய சபை, சமஷ்டி அரசியல் அமைப்பைக்கேட்டது.

இன்று இலங்கையிலுள்ள அரசியல் சிங்கள கட்சிகள் அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும் என்று ஏற்றிருக்கின்றன. இத்தேர்தலில் கட்சியின் ஆதரவில் போட்டியிட ஒருசிங்களவரே முன்வந்துள்ளார். ஆகவே அரசியல் அதிகாரம் பரவலாக்கபபடவேண்டு மென்ற சமஷ்டிக் கொள்கைக்கு சிங்கள மக்களே இறுதியில் இசைவார்களென்ற நம்பிக்கையுண்டு. இந்த இசைவைப் பெற நாம் தொடாந்து முயற்சி செய்யவேண்டும். நாட்டிற்கும் எமக்கும் நல்லதோர் அரசியல் அமைப்பாகிய சமஷ்டி அமைப்புக் கொள்கையை நாம் கைவிட வேண்டிய அவசியமில்லை.

# மலையகத் தமிழர் உரிமைபெறும்நாளே ஈழத் தமிழினத்தின் ,"மே" திருநாள்!

## யாழ். முற்ற வெளியில் நவம் பேச்சு!

உண்ணுர்டண்ணை நிருயர்

"ஒவ்வொரு நாட்டிலும் அதனது பொருளாதார வளர்ச்சிக்காக முதுகெலும்பாக உழைக்கும் பாட்டாளி வர்க்கம் தனது உரிமையைப் பெற இரத்தம் சிந்திப் போராடி உரிமையை வென்றெடுத்த நாளே உலகெங்கும் மே நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகத் தொழிலாளர் தினமான இந்நாளிலே, எமது நாட்டில் வாழ்ந்து அந்நாட்டின் பொருளாதார உற்பத்திக்காக உழைத்து உழைத்து உருக்குலைந்து விட்ட மலையக பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி சிந்திக்காமலிருக்க முடியாது.

இவ்வாறு கடமை வீரர் வ. ந. நவரத்தினம் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலியங்கும் மொழி வழி பிரிந்த தொழிற்சங்கங்களினுல் கூட்டாக யாழ் முற்றவெளியில் நடாத்தப்பட்ட மே நாள் விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

கூட்டம் நடைபெறுவதற்கு முன்னராக, இணுவில் சந்தையடியிலிருந்து மிகப் பிரமாண்டமான ஊர்வலமொன்று புறப்பட்டது. பெருந்திரளான வாலிபர்கள், சைக்கிள் வண்டி, மாட்டுவண்டிகளில் தொழிலாளர் உரிமைக் கோஷங்களை எழுப்பிக் கொண்டு முன் செல்ல. அழகான வீடுபோல் அமைக்கப்பட்டிருந்த அலங்கார இரதத்தில் இ. ப. தொ. க. தலைவர். டாக்டர். இ. மு. வி. நாகநாதன், செயல்வீரன் திரு. வி. தர்மலிங்கம், அடலேறு மு. ஆலால சுந்தரம் ஆகியோர் அமர்ந்திருந்து ஊர்வலத்தை வழிநடாத்திச் சென்றுர்கள்.

மே தினத்தைக் கொண்டாடவோ ஊர்வலம் நடாத்தவோ எமக்குத்தான் உரிமையுண்டு, மற்றக் கட்சிகளுக்கும் மேதினத்திற்கும் என்ன தொடர்பு இருக்கின்றதென்று கூறிக்கொண்டிருந்த இடது சாரிகளை ஒரு கணம சிந்திக்குமளவுக்கு மிகப் பெரிய ஊர்வலம் அமைந்துவிட்டதென்று மக்கள் கதைத்துக் கொண்டார்கள்.

கூட்டம் முற்றவெளியில் அழகாக அமைக்கப்பட்டிருந்த "தியாகி" அமரர் ஐயா அரங்கில் நடைபெற்றது. கடமை வீரர் நவம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்களுக்கு வழி காட்டுவது சரியா...? என்ற கேள்வியை சிலர் எழுப்பலாம், மலையக மக்களை வழி நடாத்தக் கூடிய சக்தி படைத்தவர்கள் நாங்களேயென்று தொண்டமான், அசீஸ் போன்றவர்கள் கூறிக் கொண்டு தங்களது சொந்தச்செல்வாக்கையே வளர்த்துக்கொண்டிருக்கின்றுர்கள். இவர்கள் இருவரும் மாத்திரமன்றி மற்றும் தொழிற் சங்கங்களும் அரசியல் ரீதியிலியங்காது தங்களது சொந்தச் செல்வாக்கை வளர்ப்பதற்காகத்தான் தொழிற்சங்கத்தோடு மாத்திரம் நிற்கின்றன......ஆனுல் தமிழரசுக்கட்சியொன்றுதான் அரசியல் ரீதியாகவும் தொழிற்சங்க ரீதியாகவும் இயங்கி வெற்றி நடைபோட்டு வருகின்றது......

மலையகத்தில் இயங்கும் இ. தொ. கழகத்தைத் தவிர ஏனைய தொழிற்சங்கங்களெல்லாம் தொழிலாளர்களின் உரிமைக்காக உழைக்கிறுமென்று கூறி அவர்களை ஏமாற்றி ஏழைகளாக்கி தாங்களே பெரிய முதலாளிகளாக வாழ்ந்து கொண்டு சுகம் அனுபவிக்கின்றுர்கள். தமிழரசுத தொழிற் சங்கம் ஒன்றுதான் மலையக மக்களிடமிருந்து எவ்வித பிரதியுபகாரத்தையும் எதிர்பாராது செயல்படுகின்றது.

பொன்னம்பலமும் நவரத்தினமும்கூறித்திரின்கிறுர்கள் மலையக மக்களை நாம் காட்டிக் கொடுத்து விட்டோமென்று... பொன்னம்பலம் ஒருஅற்பமந்திரிப்பதவிக்காக பத்துலட்சம் மக்களை நாடற்றவர்களாக்கும் சட்டத்திற்கு ஆதரவு அளித்தார், இந்த நாட்டிலே வாழ்கின்ற மலையக மக்களில் ஒரு பகுதியினருக்காகுதல் உரிமை கிடைக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட 'சிறிமா—சாத்திரி' ஒப்பந்தத்தையே நாம் ஆதரித்தோம். அதுவும் மலையகத்திலே கருத்தரங்கம் நடாத்தி, அனைவரது சம்மதத்தையும் கேட்க பெருவாய்ப்பை ஏற்படுத்தினோம நவரத்தினம்வரவில்லை, முன்னுள் செனட்டர் மாணிக்கம் கலந்து கொண்டு ஆதரித்தார்.

தந்தை செல்வா அவர்கள் ஒருபெறுமதிவாய்ந்த வார்த்தையை அங்கு கூறினுர். 'ஒப்பந்தத்தின் நிலைமை இது தான்... நான் இதை ஆதரிக்கவோ, எதிர்க்கவோ, கூறவில்லை. நீங்கள் ஆதரித்தால் நானும் ஆதரிக்கிறேன். நீங்கள் எதிர்த்தால் நானும் எதிர்க்கிறேனென்று கூறினுர். ஆனுல் யாரும் எதிர்க்காத காரணத்தால், நாம் முழுமனதுடன்மசோதாவை ஆதரித்தோம், பலமுறை வாதாடிதனி 'இடாப்பு' பகுதியை இல்லாமற் செய்தோம், 1948ம் ஆண்டு மலையகத் தமிழர் பிரச்சினையை வைத்து உருவாக்கப்பட்ட எமது கட்சி என்றென்றும் அவர்களது உரிமைக்காக குரலெழுப்பிக் கொண்டேயிருக்கும் அவர்களது உரிமையை வென்றெடுத்து அனைவரும் சேர்ந்து கொண்டாடும் நாளே எமக்குமே நாள் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்,

மலையகத்தில் ஆதரித்த மாணிக்கமும் கருத்தரங்கில் கலந்து கொள்ளாத நவரத்தினமும் வேண்டுமென்றே எமக்கு எதிரான பொய் பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றுர்களென்பதை மக்கள் அறிவார்கள், இவர்களின் பொய் புரட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டியது மக்களைச் சார்ந்தது' இவ்வாறு திரு. நவரத்தினம் அவர்கள் உரையாற்றினுர்கள்,



காரைநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி வெளியே நடத்தப்பட்டுவரும் பொய்ப்பிரச்சாரங்களைத தகர்த்தெறிந்து, தங்கள் ஆதரவு என்றென்றும் தளபதி அமிர்தலிங்கத்துக்கே என்பதை உறுதிப்படுத்திவிட்டனர்.

வல்வெட்டித்துறை...

(1-ம் பக்கத் தொடாச்சி)

இதனுல் விரக்தியுற்ற பொதுமக்கள் வல்வெட்டித்துறை பிரதம தபால் அதிபரிடம் இதுபற்றி முறையிட்டு உ.ளளதாக அறியப்படுகிறது.

இந்தப் பிரசாரத்திற்கு பக்கபலமாக இக்கிராமத்தின் கிராமசேவையாளரும் முழுமூச்சாக இருந்து வருவதால் கருமநேரங்களில் கிராமசேவையாளர், கிராமசேவையாளரின் காரியாலயத்தில் காணப்படுவதில்லையாம். அவர் கருமநேரங்களில் உபதபால் நிலையத்திலேயே பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பாராம்.

தமிழ் காங்கிரஸ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறேன். என்னைச் சிலர் கட்டாயப்படுத்தி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியில் சேர்த்தனர். அவர்களை புறக்கணிக்க முடியாமையால் இதுவரை நான் காங்கிரஸ் வாலிபமுன்னணிக்குதலைமை தாங்கவேண்டி ஏற்பட்டது என்று அவர் கூறினுர்.

இக்கூட்டத்தில் பேசிய திரு. அமிர்தலிங்கம், காரைநகர் எனக்கு எதிராக திரும்பிவிட்டது என்று நாட்டில் நடத்தப்பட்டு வந்த பிரசாரம் இன்றுடன புஸ்வாணமாகிவிட்டது: நான் இதுநாள் வரை காரைநகரை என் பிறந்தகம்போலவே கருதி சேவை செய்துவந்துளளேன். இனி மேலும் செய்வேன்; என்னையும், காரைநகர் மக்களையும் பிரிப்பதற்கு மாற்றுர் எடுத்த நடவடிக்கைகள் இன்றுடன் தூள்தூளாகிவிட்டன. காரைநகர் மக்கள் என்றென்றும் கொள்கை வீரர்கள்; தமிழ்ப் பற்றும் இன உணர்வும் கொண்டவர்கள் என்பதை இன்று நிரூபித்துவிட்டீர்கள். காரைநகரை என் கண்ணின் மணிபோல் கருதி சேவை செய்திருக்கிறேன். சந்தேகங்கள், குழப்பங்கள் யாருக்காவது இருந்தால், என்னிடம் வரலாம். அவற்றைப் போக்க நான் தயாராக இருக்கிறேன்;

காரைநகர் வாழ் பெருமக்களே! என் தந்தைமாரே தாய்மாரே! தம்பிகளே தங்கைகளே! மே 27ல் தமிழினத்தை பிரிக்க முயன்ற பேதைகளுக்கு தகுந்தபாடம் கற்பித்து தமிழரசுக்கட்சிக்கு வெற்றி தேடித் தருவீர்! இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பேசினுர். இ. தொ. கழகத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி, தென்னரசு, திருமதி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர்.

இக்கூட்டம் காரைநகர் புதுறோட்டு சிதம்பரமூர்த்தி கேணியடி திறந்த வெளியில் திரு. சு. இராசசேகரம் ஜே. பி. தலைமையில் நடைபெற்றது.

## மாதோட்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தபால் நிலையத்தைத் தரமுயர்த்தியமை, உயிலங்குளம்திருக்கேதீஸ்வரம், ஆதியாம் இடங்களில் மத்திய மருந்துச்சாலையை ஏற்படுத்தியமை யாவும் எனது முயற்சியின் பயனே என்பதைத் தாழ்மையுடன் தெரியப்படுத்துகிறேன்.

மாற்றுக் கட்சி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

சொன்னுராம் உங்கள் தமிழரசு வேட்பாளரின் செருப்பு ஆங்கிருக்கிறது. அதனை எடுத்துக் கொண்டுபோய் அவரிடம் கொடும்.

அதற்கு மேற்படி பிரமுகர் சுடச்சுட பின்வருமாறு பதில் கொடுத்தாராம்.

"தயவு செய்து அதனை நீரே கொண்டு வந்தமாதிரிக் கொண்டுபோய்க் கொடும்."

இச்சம்பவத்தை அடுத்து மாற்றுக் கட்சி வேட்பாளரின் சின்னத்தனத்தையிட்டு மக்கள் சிரிப்பாய்ச் சிரிக்கின்றனர்!

## சுந்தரலிங்கத்தாரே..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வீர்கள். அடுத்தநாள் மொட்டை தட்டி, கொட்டை கட்டி பட்டைசாத்தி தாங்கள் கீரிமலையில் கட்டிவிட்டிருக்கும் வீட்டில் காலட்சேபம் நடாத்தி துரைசாமிக் குருக்கள் மூலம் விபூதி கொடுத்து மக்களை இரட்சிப்பீர்கள் என்பது என்றே நிச்சயப்படுத்தப்பட்டுவிட்டது.

—"அப்பலோ"

அன்பர்களே! என்னிடம் உதவி நாடிவந்த மக்கட்கெல்லாம் சாதிசமய பேதமின்றி என்னுல் இயன்ற உதவிகள் யாவும் புரிந்துள்ளேன் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். எல் மக்களுக்கும் என் வீடு தம் வீடுபோலவே இருந்து வருகிறதை மறக்கவும் மாட்டீர்கள். சென்ற 5 வருடங்களிலும் மன்னுர்ப் பகுதிக்கு பலகோடி ரூபா பெறுமதியான வேலைகள் நடைபெற்றிருப்பது மலைவிளக்காகும். வட, கீழ்மாகாணங்களில் உள்ள எந்தத் தேர்தல் தொகுதிக்கும் இவ்வளவு பெருந் தொகையான பணம் ஒதுக்கப்படவில்லை என்பதை யான் பொருமையுடன் கூற விரும்புகிறேன். இன்னும் முருங்கனில் ஓர் சீமேந்துத் தொழிற்சாலை அமைப்பதற்கும், மன்னுர் வைத்தியசாலையில் எக்ஸ்றே இயந்திரம் அமைப்பதற்கும் என்னுல் இயன்ற பெரு முயற்சிகள் புரிந்து வருகின்றேன்.

தாழ்வு பாட்டில் இராணுவத்தினரால் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலையை நிவிர்த்திக்க இரவுபகலாய் ஊணுறக்கமின்றி யான் பாடுபட்டதனுல் அல்லவா நம் மக்கள் சேதமின்றிக் காப்பாற்றப் பட்டார்கள்.

ஆனுல் நான் எவ்வளவைச் செய்தபோதிலும் ஒரு சிலர் "அழகக்கோன் என்ன செய்தார், அழகக்கோன் என்னத்தை வெட்டி விழுத்தினுர், நாம் பாராளுமன்றத்திற்குப் போனுல் விண்ணை வில்லாக வளைப்போம், மண்ணைக் கயிருகத் திரிப்போம்" எனத் தம்பட்டம் அடிக்கிறுர்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 8-ம திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்.